# பாவம்
# பொல்லாதது

ரால்ப் வென்னிங்

**பாவம் பொல்லாதது**

*ரால்ப் வென்னிங்*

*முதல் பதிப்பு:* ஏப்ரல் 2023

*இந்நூலில் பயன்படுத்தப்பட்டிருக்கும் வேத வசனங்கள் அனைத்தும் இந்திய வேதாகம சங்கம் வெளியிட்டிருக்கும் பழைய திருப்புதல் (OV) பரிசுத்த வேதாகமத்தில் இருந்து பெறப்பட்டவை.*

*இந்நூலின் சகல உரிமைகளும் பதிப்பகத்தாருக்குரியது. நூலின் எந்தப் பகுதியையும், எந்தவிதத்திலும் பதிப்பகத்தாரின் எழுத்துபூர்வ முன் அனுமதியின்றி மறுபதிப்பு செய்வதற்கு அனுமதியில்லை. விமர்சனத்திற்காகவோ, விரிவுரைகளில் குறிப்பிடவோ, பிரசங்கத்தில் பயன்படுத்தவோ, ஆய்வுகளுக்காகவோ குறிப்பிட்ட சிறு பகுதியைப் பயன்படுத்திக் கொள்ளலாம். எல்லாத் தேவைகளுக்கும் கீழ் வரும் பதிப்பகத்தாரின் முகவரியோடு தொடர்பு கொள்ளவும்.*

**© திருமறைத்தீபம்**
6/87 காமராஜர் தெரு,
திருவள்ளுவர் நகர்,
அயனாவரம்,
சென்னை 600023.
தமிழ்நாடு, இந்தியா.
*தொலைபேசி:* +91 9445671113
*ஈமெயில்:* msjamesin@gmail.com

Copyright © Grace Publications Trust by Peter King & H J Appelby
Originally published in English under the title Sin is Serious.

*கிறிஸ்தவ தமிழ் இலக்கியங்கள் குறித்த மேலதிக தகவல்களுக்கு* www.biblelamp.me *வலைப்பூவைப் பார்க்கவும்.*

# பதிப்புரை

பாவம் பொல்லாதது, என்ற இந்த நூலை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன். பீட்டர் கிங்கும், ஜோன் ஆப்பிள்பீயும் ஆங்கில மூலத்தில் இருப்பதை சுருக்கித் தந்திருக்கிறார்கள். ஆங்கிலத்தில் இந்தச் சுருக்கத்தை முதன் முதல் வெளியிட்டவர்கள் இங்கிலாந்திலுள்ள கிருபை வெளியீட்டாளர்கள் (Grace Publications, UK). இதைத் தமிழில் மொழியாக்கம் செய்து வெளியிட அவர்கள் அனுமதியளித்திருப்பதற்காக அவர்களுக்கு என் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்தத் தமிழ்ப்பதிப்பை திருமறைத்தீபம் வெளியிடுகிறது.

இந்நூலை வெளியிடப் பலரும் துணைசெய்திருக்கிறார்கள். இதனை மொழியாக்கம் செய்வதிலும், பிழைதிருத்தங்களைச் செய்துதவுவதிலும், நூலை வடிவமைத்தும், அட்டைப் படத்தைத் தயாரித்தும், அச்சுக்குப் போகும்வரை அனைத்துப் பணிகளையும் செய்திருக்கும் ஜேம்ஸுக்கு என்னுடைய நன்றிகள். பாலசுப்பிரமணியமும், ரோசலின் ஜேம்ஸும் பிழைத்திருத்தங்களைச் செய்வதில் உதவியிருக்கிறார்கள். நான் போதகராக இருக்கும் சபையார் ஜெபித்து என்னை இப்பணியில் ஈடுபட ஊக்குவித்திருப்பதற்காக அவர்களுக்கும் என் நன்றிகள்.

ஆரோக்கியமான ஆவிக்குரிய வாழ்க்கைக்குத் துணைபோகும் ஒரு நல்ல நூல் தமிழில் வெளிவருவது மகிழ்ச்சியைத் தருகிறது. இதை வாசித்துப் பலரும் பயனடைய கர்த்தர் துணைபுரிய வேண்டும் என்பதே என் ஆவலும், ஜெபமும்.

ஆர். பாலா
பதிப்பாசிரியர்
*2023*

# அறிமுகம்

**(ஆங்கில மூல நூலில் இருந்து)**

*கடந்த நூற்றாண்டில் இரண்டு பயங்கரமான உலகப் போர்கள் நடந்துள்ளன. உலகத்தின் பல பகுதிகளிலும் உள்நாட்டுப் போர்கள் நிகழ்ந்துள்ளன. ஓரினத்தையே அழிக்கும் பெரும் இனப்படுகொலையையும், கொடூரமான சர்வாதிகாரிகள் எழுந்து வீழ்வதையும், இனங்களை அழிக்கும் முயற்சிகளையும், மாபெரும் பஞ்சங்களையும், பயங்கரமான வெள்ளப்பெருக்குகளையும், எய்ட்ஸ் போன்ற நாடுகளைப் பாதிக்கக்கூடிய உலகளாவிய கொடும் நோய்கள் பேரழிவை தேசங்களுக்கு ஏற்படுத்தியதையும் கண்டிருக்கிறோம். நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் உலகத்தில் தீமை இருக்கிறது என்ற உண்மையை இவை நமக்குத் தெரிவிக்கின்றன.*

*இதே காலப்பகுதியில், வேதம் போதிக்கும் பாவத்தைப் பற்றிய உண்மையை நம்ப மறுப்பதும் அதிகரித்து வந்திருப்பது விந்தையாக இருக்கிறது. வேதத்தில் விளக்கப்பட்டிருக்கும் பத்து கட்டளைகளை, வெறும் பத்து ஆலோசனைகளாக, நம் காலத்தில் எளிதில் நிராகரித்துவிடலாம் என்ற எண்ணமும் உருவாகியிருக்கிறது.*

*வேதம் போதிக்கும் பொதுவான உண்மையை இருட்டடிப்புச் செய்வதும், அவற்றைச் சிலர் உதாசீனப்படுத்தி வருவதும், இந்த உலகத்தில் தீமை இருக்கிறது என்பதும் நம் கண்கள் முன் விரிந்து நிற்கவில்லையா?*

*ஆனால் நம் உலகம் ஏன் பூரணமாக இல்லாமல் இருக்கிறது? மேலாக, நாமிருக்கும் நிலையை விட நாம் ஏன்*

ஒழுங்கானவர்களாக இருக்கவில்லை? இதற்கான அறிவார்ந்த பதிலை வேதம் மட்டுமே நமக்குத் தருகிறது. உலகத்தில் அனைத்தும் மெதுவாக மாறிக்கொண்டே வருகின்றன என்ற பரிணாம வளர்ச்சிக் கோட்பாடு இதற்கான பதிலை நமக்குத் தரவில்லை. இதுவரை இருந்திருப்பதைவிட இப்போது உலகத்தில் அக்கிரமங்கள் பேரளவில் அதிகரித்தே வந்திருக்கின்றன. ஏனைய மதங்களும் இதற்கான பதிலை நமக்குத் தருவதில்லை. வேறு சிலர், பாவம் என்று ஒன்றில்லை, அதனால் அதைப்பற்றி நாம் பெரிதாக அலட்டிக்கொள்ளத் தேவையில்லை என்பார்கள். சிலர், உலகில் பாவம் என்று ஒன்றிருந்தால் அதை நாமே சரிசெய்து விடலாம் என்பார்கள். நம்மை நாமே ஒழுங்குபடுத்தி ஏன் நல்ல நிலைக்குக் கொண்டுவராமலிருக்கிறோம் என்பதற்கான சான்றுகளை செய்தி ஊடகங்கள் தந்தபோதும் இத்தகைய எண்ணங்கள் தொடருகின்றன. ஆகவே, நாம் ஒரு சிக்கலான நிலையில் இருக்கிறோம்.

தான் படைத்த பரிபூரணமான உலகில் வாழ்ந்து, அதைப் பாதுகாத்துப் பயன்படுத்திக் கொள்ளுவதற்காக கடவுள் படைத்த முதல் மனிதர்கள், அவருடைய ஆலோசனையின்படி வாழ்வதை நிராகரித்து அவருக்கு எதிராகத் திரும்பியதாலேயே தீமை இந்த உலகத்திற்கு வந்தது என்று வேதம் விளக்குகிறது. அன்றிருந்து கடவுள் சொல்வதை செய்ய விருப்பமில்லாத மனப்பான்மை மனிதர்கள் அனைவரதும் இயல்பான நிலையாக மாறிவிட்டது. நாமெல்லோருமே அத்தகைய மனப்பான்மையோடேயே பிறக்கிறோம். நாம் செய்யும் ஒவ்வொரு தவறான செயலுக்கும் இதுவே காரணமாக இருக்கின்றது. இந்த உலகத்தையும், நம்மையும் இது கெடுத்துவிட்டது. இதுவே நம்முடைய சிக்கலான நிலை!

தாம் படைத்த பரிபூரணமான நிலைக்கு இந்த உலகத்தை மீட்டெடுக்க கடவுள் தீர்மானம் செய்திருப்பதாலேயே, பரிபூரணமான மானுட வாழ்க்கை எப்படி இருக்கும் என்பதை நமக்குக் காட்டுவதற்காக இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்தார் என்று வேதம் விளக்குகிறது. தன்னை விசுவாசித்துப் பின்பற்றுகிற அனைவருக்காகவும், அவர்கள் செய்யும் அனைத்துப் பாவங்களையும் இல்லாமலாக்குவதற்கும், இயேசு

*கிறிஸ்து தன்னுடைய பரிபூரண வாழ்க்கையைச் சிலுவையில் பலியாகச் செலுத்தினார். இயேசு கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பியதன் மூலம், அவர் தன் வாழ்வில் செய்த அனைத்திலும் தான் திருப்தி அடைந்திருக்கிறேன் என்பதைக் கடவுள் காட்டியிருக்கிறார். கிறிஸ்துவை விசுவாசித்துப் பின்பற்றும் அனைவரும் இப்போது கடவுளோடு நட்புறவோடிருக்க முடியும். அவ்வாறிருக்கும்போது தேவனைவிட்டு விலகியிருப்பதிலேயே மனிதர்கள் ஏன் திருப்தி அடைகிறார்கள்?*

*இயேசுவை விசுவாசித்துப் பின்பற்றுகிற ஒவ்வொருவரின் அவல நிலையையும் தேவன் தீர்த்து வைத்திருப்பதால்தான், மனிதர்கள் அவசியமாகத் தெரிந்துகொள்ள வேண்டியவராக இயேசு இருக்கிறார். 'நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்' (யோவான் 14:6) என்று இயேசு சொல்லியிருக்கிறார். 2000 வருடங்களாக உலகம் முழுவதும் உள்ள அநேக மக்கள் இந்த வார்த்தை உண்மையானது என்பதைக் கண்டறிந்திருக்கிறார்கள். இது எந்தளவுக்கு உண்மையானது என்பதை நீங்கள் அறிய விரும்பினால், பாவம் உங்களில் எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை நீங்கள் முதலில் புரிந்துகொள்ள வேண்டும். இதைப்பற்றி வேதம் போதிப்பதைத்தான், இனி அடுத்து வரும் அத்தியாயங்கள் விளக்குகின்றன; தொடர்ந்து வாசியுங்கள்.*

ஜோன் ஆப்பிள்பி மற்றும் பீட்டர் கிங்<br>2004

# பொருளடக்கம்


1. பதிப்புரை ........................................................3
2. அறிமுகம் (ஆங்கில மூல நூலில் இருந்து)..........................5
3. நூலைப் பற்றி.................................................... 11
4. அறிமுகம் ........................................................19
5. பாவம் என்றால் என்ன? ...........................................25
6. பாவத்தின் பாவம் ...............................................27
7. பாவத்தினால் ஏற்படும் தீங்கிற்கான சாட்சியங்கள் .........59
8. பாவத்தின் தன்மையை அறிவதால் வரும் பயன்கள்..........................................101
9. பாவம் நம்முடைய எதிரி என்ற உண்மை தரும் பாடம் ...................................123

# நூலைப் பற்றி . . .

ரால்ப் வென்னிங் (Ralph Venning, 1622-1674) ஒரு பியூரிட்டன் பெரியவர். ஆங்கிலேய ஒத்துழையாமைவாதப் பிரசங்கிகளில் ஒருவர் (Nonconformist). இங்கிலாந்தில், டெவன்சயர் (Devonshire) என்ற இடத்தில் பிறந்து கேம்பிரிஜ்ஜில் இருந்த இம்மானுவேல் கல்லூரியில் பயின்று பட்டங்களைப்பெற்று, 25 வருடங்கள் சவுத்வேர்க் எனுமிடத்தில் இருந்த சபையில் (St. Olave's Church in Southwark) போதகராகப் பணியாற்றியவர். 1662ம் ஆண்டில் ஒத்துழையாமைக்கு எதிரான அரச கட்டளையால் திருச்சபைப் பணியில் இருந்து நீக்கப்பட்டவர்களில் இவரும் ஒருவர். அதற்குப் பிறகும் ஒரு சுயாதீன சபையில் ரொபட் பிரேக் (Robert Bragge) என்பவரோடு பலகாலம் போதகராகப் பணியாற்றியுள்ளார். 1674, மார்ச் 10ம் தேதி அவர் தன்னுடைய 53ம் வயதில் இறைபதமடைந்தார். பன்ஹில் நிலம் (Bunhill Fields) எனுமிடத்தில் அவர் புதைக்கப்பட்டார்.

ரால்ப் வென்னிங் 1669ல் எழுதிய மிகவும் முக்கியமான, அதேநேரம் பிரபலமான நூல் The Plague of Plagues. 'நோய்களி லெல்லாம் தலையாய நோய்' என்று இதை எழுத்துபூர்வமாக மொழிபெயர்க்கலாம். இதற்கு ஒரு உபதலைப்பையும் அவர் தந்திருந்தார். அது The Sinfulness of Sin. அதாவது, 'பாவத்தின் பாவம்.' 17ம் நூற்றாண்டு பியூரிட்டன் பெரியவர்களைப்போல பாவத்தை அக்குவேறு ஆணிவேராகப் பிரித்து ஆராய்ந்து விளக்கியவர்கள் இருக்கமுடியாது. உண்மையில் அனைத்துப் பியூரிட்டன் பெரியவர்களுமே அந்தவகையில் பாவத்தை

ஆராய்ந்து பிரசங்கித்திருக்கிறார்கள். 20ம் நூற்றாண்டின் முக்கிய பிரசங்கிகளில் ஒருவரான டாக்டர் மார்டின் லொயிட் ஜோன்ஸ் தன்னுடைய சுவிசேஷத்தை எப்போதுமே பாவத்தில் இருந்து ஆரம்பித்து விளக்குவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். பாவத்தில் ஆரம்பித்து அதை விளக்காத சுவிசேஷம் அவரைப் பொறுத்தவரையில் சுவிசேஷமே அல்ல. அவர் பியூரிட்டன்களின் எழுத்தில் காதல்கொண்டிருந்து அந்தப் பாணியைத் தன் பிரசங்கத்தில் பின்பற்றியவர்.

இன்று மேலை நாடுகளில் மட்டுமல்லாமல் கீழைத்தேய நாடுகளிலும் பாவத்தை விசுவாசிகளும், சபைகளும் உதாசீனப்படுத்தி வருகின்றன. பாவத்தை ஆழமாக ஆராய்ந்து பார்ப்பதிலும், பிரசங்கிப்பதிலும் காலத்தைச் செலுத்தி ஆத்துமாக்களைத் தொல்லைப்படுத்தக்கூடாது என்ற ஒரு தவறான, ஆபத்தான மயக்கநிலை இன்று நம்மினத்திலும் உலவிவருகிறது. கிறிஸ்துவிடம் ஒருவர் வந்தவுடனேயே அவருடைய பாவத்துக்கு முடிவுகட்டப்பட்டுவிட்டதாகவும், இனிக் கிறிஸ்தவ சுதந்திரத்தை சாகும்வரை இன்பமாக அனுபவிக்கவேண்டியதுதான் அவருடைய கடமை என்ற போலிப்போதனை திருச்சபைகளைப் பாதித்து ஆத்துமாக்களை மோசம்போக்கிக் கொண்டிருக்கிறது. அதனால் பாவத்தைப்பற்றிய பிரசங்கங்களை மட்டுமல்லாமல் பாவத்தைப் பாவமாகப் பார்த்து, ஆத்துமாக்கள் அதைச் செய்துவிடுகிறபோது வேதபூர்வமாக அதை அணுகி அதற்குப் பரிகாரம் செய்து ஆத்துமாக்களுக்கு உதவுகிற போதக ஊழியத்தையும் இன்று காணமுடியாமல் இருக்கிறது. இதற்கெல்லாம் காரணம் பாவம் இன்று உதாசீனப்படுத்தப்படுவதுதான். அதற்காக பாவத்தைப்பற்றிப் பிரசங்கிகள் பேசுவதேயில்லை என்று நான் சொல்லவரவில்லை; அவர்கள் பாவத்தைப் பாவமாக வேதம் விளக்குகிறமுறையில் கணித்து விளக்குவதில்லை என்றே சொல்லவருகிறேன்.

பாவத்தை வெறும் மானுட பலவீனமாகவே அநேகர் பொதுவாகக் கணிக்கிறார்கள். அந்தப் பலவீனம் போக்கப் படுவதற்காக பிரசங்கிகள் கொடுக்கும் மருந்து, உலகத்தைச் சார்ந்த உளவியல் சார்பானதாகவோ அல்லது சமுதாய

சீர்திருத்தமாகவோ மட்டுமே இருந்து வருகிறது. இதனால் கிறிஸ்துவின் சுவிசேஷமும் அடியோடு பாதிப்புக்குள்ளாகிறது. பாவம் வெறும் பலவீனமாக மட்டுமே இருக்குமானால் தேவகுமாரன் இந்த உலகுக்கு வந்திருக்கவும், சிலுவையில் தன்னைப் பலியாகக் கொடுக்கவும் வேண்டிய அவசியம் நேர்ந்திருக்காது. பாவத்தைப் பலவீனமாகப் பார்ப்பது சுவிசேஷத்தைக் கொச்சைப்படுத்துகிறது; கிறிஸ்துவின் சிலுவைப் பாடுகளிலும், மரணத்திலும் சேற்றைவாரி இறைக்கிறது. என்றுமில்லாதவகையில் இன்று மேலைநாடுகளிலும் கீழைத்தேய நாடுகளிலும் பாவத்தைப்பற்றிய வேதபூர்வமான போதனைகளும் பிரசங்கமும் அவசியமாக இருக்கின்றன. சுவிசேஷம் சுவிசேஷமாகப் பிரசங்கிக்கப்பட வேண்டுமானால், பரிசுத்த ஆவியானவரின் ஆத்மீக எழுப்புதலைத் திருச்சபையில் காணவேண்டுமானால் பாவத்தைப் பற்றிய போதனகளையும், பிரசங்கங்களையும் மறுபடியும் வேதபூர்வமாகக் கொடுக்க வேண்டியது அவசியம். பாவத்தைப் பாவமாகப் பார்க்காவிட்டால் சுவிசேஷத்தின் மூலம் இரட்சிப்பிற்கு வழியில்லை.

ரால்ப் வென்னிங்கினுடைய நூலை இங்கிலாந்தில் உள்ள கிருபை வெளியீடுகள் (Grace Publications) நவீன ஆங்கிலத்தில் மூலநூலைச் சுருக்கி வெளியிட்டார்கள். இப்படி மூலநூலைச் சுருக்குவது இலகுவான காரியமல்ல; அதுவும் ஒரு பியூரிட்டன் பெரியவரின் நூலைச் சுருக்குவது கடினமே. மூலத்தின் தன்மையைச் சுருக்கம் இழந்துவிடக்கூடிய ஆபத்து இருக்கிறது. மூலநூல் 17ம் நூற்றாண்டு ஆங்கிலத்தில் இன்றைய வாசகர்களுக்கு வாசிப்பதற்குக் கொஞ்சம் கஷ்டமானதாக இருக்கும். இருந்தபோதும் ரால்ப் வென்னிங்கின் மூலநூலின் பயனைத் தற்கால வாசகர்கள் அடையும்படி ஜோன் ஆப்பில்பீயும், பீட்டர் கிங்கும் ஆங்கிலத்தில் அதைச் சுருக்கியளித்திருக்கிறார்கள். இறைபதம் அடைந்துவிட்ட ஜோன் ஆப்பில்பீ (John Appleby) எனக்குத் தெரிந்த நண்பர். முப்பத்தியெட்டு வருடங்களுக்கு முன் நான் தென்வேல்ஸ் இறையியல் கல்லூரியில் (South Wales Bible College) படித்துக்கொண்டிருந்தபோது ஒருமுறை இங்கிலாந்தில் அவருடைய வீட்டில் அவரையும் அவருடைய மனைவியையும் சந்தித்து உணவருந்தியபோது எழுத்துப்பணியிலும்,

மொழிபெயர்ப்புப் பணியிலும் ஈடுபடும்படி மிகவும் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டார். உங்களைப்போன்ற ஒருவர்தான் இதைச் செய்யமுடியும் என்ற அவருடைய வார்த்தைகள் இன்னும் என் காதில் ஒலித்துக்கொண்டிருக்கின்றன. ஒருவிதத்தில் ஆப்பில்பீயின் உந்துதலும் ஜெபமுமே நான் இன்று செய்துவரும் சிறு பணிகளுக்குக்கூட காரணமாக இருந்திருக்கின்றன.

பியூரிட்டன் எழுத்துக்கள் 17ம் நூற்றாண்டு ஆங்கிலத்தில் இருப்பதையும்விட, இன்னுமொரு பிரச்சனை நம்மினத்து மக்களுக்கு இருக்கிறது. பியூரிட்டன் கால வரலாற்று, இறையியல் பின்னணி நம்மக்களுக்குப் பரிச்சயமில்லாதது. அது தெரியாமல் பியூரிட்டன் எழுத்துக்களின் முழுப் பலனையும் அடையமுடியாது. அத்தோடு, பியூரிட்டன்களின் இறையியல் கண்ணோட்டம், ஆழ்ந்த நுணுக்கமான அணுகுமுறை, கறைத்துக்குடித்திருக்கும் வேதத்தை அவர்கள் வசனம் வசனமாக விளக்கி இறையியல் சத்தியங்களைத் துல்லியமாக எண்ணற்ற பயன்பாடுகளோடு விளக்குகின்ற தன்மை, ஆகியவை அடங்கிய ஆத்மீக ஊழியங்களை அறவே காணமுடியாத நம்மினத்தில் அவற்றைப் புரிந்துகொள்ளும் பக்குவம் அநேகருக்கு இருக்காது. இதற்கும் மேலாக பியூரிட்டன் போதகர்கள் ஆத்தும வைத்தியர்களாக இருந்தனர். அவர்களைப்போல ஆத்துமாக்களை ஆழமாக அறிந்துவைத்திருந்த போதகர்களை ஏனைய காலப்பகுதிகளில் காண்பது அரிது. மனித இருதயத்தின் மோசமான தன்மையை அவர்கள் துல்லியமாக அறிந்துவைத்திருந்து போதகக் கண்காணிப்பு செய்வதில் மன்னர்களாக இருந்தனர். அதனால்தான் ரால்ப் வென்னிங்கும் மனித இருதயத்தை மாசுபடுத்தி ஆண்டுவரும் பாவத்தை அத்தனை தெளிவாகவும், ஆழமாகவும் ஆழ் கடலில் முத்தெடுப்பதுபோல் ஆராய்ந்து விளக்கியிருக்கிறார். மனித இருதயத்தை ஆழமாக அறிந்திராத போதகர்கள் தேர்ந்த ஆத்தும வைத்தியர்களாக இருக்கமுடியாது என்பதில் பியூரிட்டன்கள் ஆணித்தரமான நம்பிக்கை கொண்டிருந்தனர்.

அத்தோடு பியூரிட்டன்களின் எழுத்துநடையும் இன்றைய எழுத்துக்களைவிட வித்தியாசமானது. எதையும் சுருக்கமாக சொல்லிவிடும் நூல்கள் பரவலாகக் காணப்படும் இக்காலத்தில்

சில நூறு பக்கங்களில் ஆழமாகச் சத்தியத்தை விளக்குகின்றனவாக அவர்களுடைய நூல்கள் இருக்கின்றன. அதனால் எந்தப் பியூரிட்டன் நூலுக்கும், தேர்ந்தவர்களால் எழுதப்பட்ட, தற்கால வாசகர்கள் விளங்கிக்கொள்ளும்படியான ஒரு நல்ல அறிமுக விளக்கம் இன்று அவசியம் தேவை. அத்தகைய அறிமுக விளக்கமில்லாது பியூரிட்டன் நூல்களை மொழிபெயர்த்து வெளியிடுவது வாசகர்களுக்கு அதிக பலனளிக்காது என்பது அடியேனின் தாழ்மையான கருத்து. இதற்கு உதாரணமாக 19ம் நூற்றாண்டு போதகரான ஜே. சி. ரைலினுடைய 'பரிசுத்தம்' என்ற ஆங்கில நூலை எடுத்துக்கொள்ளலாம். அந்த நூலை சிறப்பாக்குவது அதற்கு ஜே. ஐ. பெக்கர் எழுதிய அறிமுக விளக்கம். ரைலின் கால வரலாற்று, இறையியல் பின்னணிபற்றி நன்கு அறிந்திருந்த பெக்கர் எந்த நோக்கத்தில் ரைல் அந்த நூலின் உள்ளடக்கத்தைப் பிரசங்கம் செய்திருந்தார், எழுதி வெளியிட்டார் என்பதை அருமையாக விளக்கியிருந்தார். ஆங்கிலத்தில் உள்ள அந்த அறிமுகமே ரைலின் நூலைத் தற்காலத்தில் பிரயோஜனமாக இருக்கப் பேருதவி புரிகிறது. அதேபோலத்தான் ஜே. ஐ. பெக்கர், ஜோன் ஓவனின் 'பாவத்தை அழித்தல்' என்ற நூலுக்கான திருத்தப் பதிப்பொன்றுக்கும் அறிமுக விளக்கம் தந்திருந்தார்.

### ரால்ப் வென்னிங்கின் நூல் எந்தவிதத்தில் முக்கியமானது?

முதலில், அது பாவத்தைப் பாவமாக அடையாளங் கண்டுகொள்ள உதவுகிறது. அதைத்தான் கிறிஸ்தவ சமுதாயம் இன்றைக்குத் தவிர்க்க முனைகிறது. ரால்ப் வென்னிங் எந்தவிதக் கூச்சமோ, தயக்கமோ, பயமோ, பெயர் கிடைக்காமல் போய்விடுமோ என்ற தவிப்பும் இல்லாமல் உள்ளதை உள்ளபடி விளக்கியிருக்கிறார். பாவம் என்றால் என்ன, என்று விளக்குவதோடு அவரது நூல் ஆரம்பமாகிறது. பாவத்தை அகோரமான ஆபத்தான பாவம் என்று வர்ணிக்கிறார் ரால்ப் வென்னிங். பாவம் எப்படிச் சம்பவித்தது என்பதில் இருந்து, பாவம் என்றொன்றில்லாவிட்டால் கிறிஸ்தவ இறையியலுக்கே இடமில்லை என்று விளக்கி, எந்தெந்த

சத்தியங்களையெல்லாம் பாவம் பாதிக்கிறதென்று நூலாசிரியர் விளக்குகிறார். கட்டடம் கட்டுவதற்கு அடித்தளம் எத்தனை உறுதியானதாக இருக்கவேண்டுமோ அந்தளவுக்கு உறுதியான அடித்தளத்தை ஆரம்பத்திலேயே பாவத்தை விளக்குவதில் நாட்டிவிடுகிறார் ஆசிரியர். வென்னிங்கின் நூலில் வேதத்தைத் தவிர வேறெதற்கும் இடமில்லை; சமுதாயத்தையோ, சந்தர்ப்ப சூழ்நிலைகளையோ, உளவியலையோ வம்புக்கிழுத்து பாவத்தை நூலளவு மெல்லியதான நம்தோலைக்கூடப் பாதிக்காத சாதாரண கொசுக்கடியாகக் காட்டும் நவீன நயவஞ்சகப் பிரசங்கிகளின் நலினத்தையெல்லாம் அவரில் காணமுடிவதில்லை. பாவத்தைப் பாவமாகப் பார்க்காவிட்டால் அதன் பாவத்தன்மையை எப்படி அறிந்துகொள்ள முடியும்?

இரண்டாவதாக, பாவத்தின் கோரத்தன்மையை நூல் தோலுரித்துக் காட்டுகிறது. எந்தளவுக்கு அது கடவுளுக்கெதிரான தாகவும், மனிதனுக்கு ஆபத்தானதாகவும் இருக்கிறதென்பதை வேதவார்த்தைகளில் இருந்து தெளிவாக ரால்ப் வென்னிங் விளக்கியிருக்கிறார். நம்மில் காணப்படும் சகலவிதமான ஆனந்தங்களுக்கும் முடிவுகட்டியிருப்பது நம்மைப்பிடித்திருக்கும் பாவம் என்பதை ஆசிரியர் உணர்த்துகிறார். நம்மைக் கடவுளிடம் இருந்து பிரித்துவைத்திருக்கிறது பாவம் எனும் ஆசிரியர், அத்தகைய பிரிவு மிகவும் பாரதூரமானது என்று விளக்கி, அது நமக்கு இறப்பின்போது நிகழவிருந்த மாபெரும் நன்மைக்கு இடங்கொடாமல் செய்துவிட்டது என்கிறார். அதுமட்டுமல்லாமல், நம்மைத் தீங்குகளுக்கெல்லாம் தலையாய தீங்கான நரகத் தீங்காகிய அனுபவத்தை நித்தியமும் அடையவும் வழிசெய்திருக்கிறது என்கிறார். தற்காலப் பிரசங்கி வாசிப்பதற்குக் கூட அருகில்போகத் துணியாத அற்புதமான வேதவிளக்கங்களைப் பாவத்தைப்பற்றி இந்தப் பகுதியில் தந்திருக்கிறார் நூலாசிரியர்.

மூன்றாவதாக, பாவத்தின் பாவத்தன்மையை நாம் உணர்வது எந்தளவுக்கு அவசியம் என்பதை நூல் விளக்குகிறது. இந்தப் பகுதியில் கடவுளில் இருந்து ஆரம்பித்து, கிறிஸ்து, தூதர்கள், படைப்பு, கிறிஸ்தவர்கள், நியாயப்பிரமாணம், சுவிசேஷம் என்று ஒவ்வொரு சாட்சியாக அநேக சாட்சிகளை நம்முன்

கொண்டுவந்து நிறுத்தி, கடைசியாக பாவமே பாவத்தின் அலங்கோலத்தையும், அகோரத் தன்மையையும் பற்றி என்ன சாட்சியமளிக்கிறது என்பதையும் நாம் வாசித்தறியும்படிச் செய்கிறார் ரால்ப் வென்னிங். பாவம் எப்படியெல்லாம் தன்னுடைய குணத்தை மறைத்துப் பொய்யைச் சொல்லி, நம்மை ஏமாற்றி நாம் ஏமாந்துபோகும்படி செய்கிறது என்பதை ரால்ப் வென்னிங் விளக்கும் அருமையை என்ன சொல்வது! இந்தப் பகுதியில் இருந்து இன்னும் எத்தனையோ அருமையான விஷயங்களை உதாரணங்காட்டும் துடிப்பு எழுகிறது. இருந்தாலும் இந்த அறிமுகம், அறிமுகத்துக்குரிய அடையாளத்தை இழந்துவிடக்கூடாது என்பதில் அக்கறையாயிருந்து அதை அடக்கிக்கொள்கிறேன். ஒவ்வொரு பகுதியாக நூலை தியானத்தோடு வாசித்துக்கொண்டு போகிறபோது எந்தக் கிறிஸ்தவனும் அதனால் பாதிக்கப்படாமல் இருக்கமுடியாது. அவிசுவாசிகளையும், விசுவாசிகளையும் ஒருசேரப் பாதித்து அவர்களுடைய இருதயங்களை அசைத்துவிடும் அருமையான பணியைச் செய்திருக்கிறார் ஆசிரியர். இந்த நூலை வாசித்துப் பயனடைகிற ஆவிக்குரிய வாசகர்கள் நிச்சயம் விரிவான ஆங்கில மூல நூலைப்பெற்று வாசிக்கத் துடிக்காமல் இருக்கமாட்டார்கள் என்பது என் கருத்து.

நான்காவதாக, நமக்கு எதிரியாக பாவம் இருக்கிறதென்பதில் இருந்து நாம் அறிந்துகொள்ளும் உண்மைகளை நூல் நம்முன்வைக்கிறது. நான் அடிக்கடி பிரசங்கத்தில் சொல்லுகிற ஒரு உண்மையோடு ஆசிரியர் இந்தப்பகுதியை ஆரம்பிக்கிறார். பாவத்தைவிட நமக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடியது எதுவுமில்லை என்பதுதான் அது. அது நம் துன்பங்களைவிடவும், சாத்தானைவிடவும், மரணத்தைவிடவும், ஏன், நரகத்தையும்விட மோசமானது என்கிறார் ஆசிரியர். இந்நான்கையும் ஒன்று சேர்த்தாலும், பாவம் இவையனைத்தையும்விடப் பாவ வாழ்க்கை வாழ்கிறவர்களில் ஆபத்தை விளைவிக்கக்கூடியது என்கிறார் ரால்ப் வென்னிங். இதைச் சொல்லி நிறுத்திவிடாமல், அது ஏன் என்பதற்கான காரணங்களை அடுத்து நம்முன் நிறுத்துகிறார். அதற்குப்பிறகு கடவுளின் பொறுமை எத்தனை பெரியது என்பதையும், பாவத்துக்கெதிரான அவருடைய நீதியான

நடவடிக்கை எத்தனை சரியானது என்பதையும், அவரளிக்கும் மகத்தான பாவமன்னிப்பு எத்தனை பெரியது என்பதையும் விளக்குகிறார் நூலாசிரியர்.

கடைசி அதிகாரமான ஐந்தாம் அதிகாரத்தில் பாவம் நமக்கு எதிரியாக இருப்பதில் இருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டிய உண்மைகளை நம்முன் வைக்கிறார் நூலாசிரியர். பாவம் ஒருபோதும் நமக்கு எந்தவித ஆனந்தத்தையும் அளிக்க முடியாது, நம்மைத் திருப்திப்படுத்த முடியாது என்பதை விளக்கி பாவத்தைச் செய்வதில் நேரத்தைச் செலவிடும் காலங்களெல்லாம் இழந்துபோன காலங்கள் எனும் ஆசிரியர், பாவத்தில் இருந்து விடுதலை அளிக்கும் கிறிஸ்துவின் இரட்சிப்பு பற்றிய செய்தி எத்தனை வரவேற்கத்தக்க செய்தியாக இருக்கிறது என்று முடிக்கிறார்.

நூலின் இறுதிப்பகுதி மனந்திரும்பி கிறிஸ்துவை விசுவாசிக்கும்படி பாவத்தில் காலத்தை செலவிடும் அவிசுவாசிகளுக்கான அறிவுரையைத் தருகிறது.

நாம் இன்று அடிக்கடி கேட்கமுடியாத ஒரு வார்த்தையாக பாவம் இருந்துவருகிறது. அதை விளக்காத, மாயமான் போன்றதொரு போலிச் சுவிசேஷத்தை மக்கள் நாடுகிறார்கள்; அதைக் கைநீட்டிக் கொடுக்கக் காத்திருக்கும் ஆயிரக்கணக்கான பிரசங்கிகளையே நாடெங்கும் காண்கிறோம். இதற்கு மத்தியில் தமிழில் இந்த நூலை உங்களுக்கு அறிமுகப்படுத்துவதில் மகிழ்ச்சியடைகிறேன். இந்தப் பக்கங்களின் மூலம் பரிசுத்த ஆவியானவர் உங்களோடு பேசட்டும்; உங்கள் இருதயங்களைத் தொடட்டும்; குணமாக்கட்டும். அவருக்கே எல்லா மகிமையும்.

# அறிமுகம்

கடவுளை ஒதுக்கிவைத்துவிட்டு வாழுவதில் மனிதர்கள் ஏன் திருப்தியடைகிறார்கள், என்ற கேள்விக்கான பதில்காண, வேதம் பாவத்தைப் பற்றி என்ன சொல்லுகிறது என்பதை நாம் ஆராயவேண்டியது அவசியம்.

இதை நாம் ஐந்து தலைப்புகளின் கீழ் பார்க்கலாம்.

1. *பாவம் என்றால் என்ன? (அதிகாரம் 1)*
2. *பாவம் ஏன் மிகவும் கேடானது? (அதிகாரம் 2)*
3. *பாவம் மிகவும் கேடானது என்பதை நாம் எப்படி அறியலாம்? (அதிகாரம் 3)*
4. *பாவத்தின் மெய்யான தீங்கைப்பற்றி நாம் அறிய வேண்டிய அவசியம் என்ன? (அதிகாரம் 4)*
5. *இக்கேள்விகளின் மூலமாக நாம் கற்றுக்கொள்ளுவது என்ன? (அதிகாரம் 5)*

இந்தத் தலைப்புகளை விரிவாகப் படிப்பதற்கு முன்பாக, வேதத்தில் விளக்கப்பட்டுள்ள நான்கு அடிப்படையான உண்மைகளை நாம் நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும்.

முதலாவது, கடவுள் எல்லாவற்றையும் பரிபூரணமாகவும் நல்லதாகவும் படைத்தார். “அப்பொழுது தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும்

*நன்றாயிருந்தது.” (ஆதியாகமம் 1:31). படைக்கப்பட்ட எதுவும் அதைப் படைத்தவரிடத்தில் எந்தவிதமான தவறையும் காண முடியாது, அல்லது, அவைகளில் எந்தவிதமான குறைபாடும் இருப்பதாகக் குறைசொல்லவும் முடியாது. அப்படியானால், தற்போதைய நிலைக்கு உலகம் எப்படி வந்தது?*

*இரண்டாவதாக, வேதம் சொல்லுகிறது, கடவுள் படைத்த இரண்டு மகிமையான படைப்புகளான, தேவதூதர்களும், மனிதர்களும், அவர்கள் படைக்கப்பட்ட பரிபூரண நிலையிலிருந்து விழுந்துபோனார்கள் என்று. தேவதூதர்களில் ஒரு கூட்டத்தினர் கடவுளுக்கு எதிராக செயல்பட்டதால், அவர்கள் பரலோகத்திலிருந்து விரட்டப்பட்டார்கள் (யூதா 6). அவர்களில் ஒருவனாகிய சாத்தான், முதல் மனிதனும், மனித குலத்தின் பிரதிநிதியுமாகிய ஆதாமை, கடவுளுடைய நேரடியான கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் போகும்படிச் செய்தான். அதன் காரணமாக, ஆதாமும் அவன் மனைவியாகிய ஏவாளும், அவர்கள் வாழ்ந்துவந்த ஏதேனிலிருந்து துரத்தப்பட்டார்கள். (ஆதியாகமம் 3)*

> *‘இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் (கடவுளுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் போனது) பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால் (மனித குலத்தின் பிரதிநிதியாகிய ஆதாமுக்குள்), மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று.’ (ரோமர் 5:12)*

*மூன்றாவதாக, கடவுள், பாவத்தில் வீழ்ந்த தேவதூதர்களுக்கு நித்திய தண்டனையை விதித்தார் (யூதா 6). ஆனால், மனிதகுலத்திற்கு தம்முடைய மாபெரும் இரக்கத்தைக் காட்டினார். கடவுளுக்கு எதிரான தன்னுடைய கீழ்ப்படியாமையை உணருகிறவர்களுக்கான இரட்சகராக, தம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை, தேவமனிதனாக இந்த உலகத்திற்கு அனுப்பினார். இயேசு, தம்மை விசுவாசிக்கிறவர்களின் இடத்தில் இருந்து, பிதாவின் கோரிக்கைகள் அனைத்தையும் தம்முடைய முழுமையான கீழ்ப்படிவின்மூலம் நிறைவேற்றித் தம்மையே*

பலியாகக் கொடுத்தார். "பாவிகளை இரட்சிக்கவே கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார்" (1 தீமோத்தேயு 1:15)

இறுதியாக, கடவுளுக்கு எதிரான நம்முடைய கீழ்ப்படியாமையாகிய பாவ நிலையிலிருந்து நம்மை இரட்சிக்க, கடவுள்தாமே செயல்பட வேண்டியதாக இருந்தது. மற்றொருவர் நம்மை இரட்சிக்க வேண்டிய நிலையில் நாம் இருந்தோம். ஆகவேதான் இயேசு இந்த உலகத்திற்கு வரவேண்டிய நிலை ஏற்பட்டது? நாம் கீழ்ப்படியாமல் போனதால், நாம் மனந்திரும்ப வேண்டியிருக்கிறது. மனிதர்களை மனந்திரும்பும்படி அழைக்க, கர்த்தரால் நியமிக்கப்பட்டவராக இயேசு வந்தார். "நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன் என்றார்" (லூக்கா 5:32). ஆகவே, இயேசுவே நம்முடைய இரட்சகர் என்று நாம் விசுவாசிக்க வேண்டும். மனிதர்களுக்கு மனந்திரும்புதலையும், விசுவாசத்தையும் கொடுக்கவே பரிசுத்த ஆவியானவர் இந்த உலகத்தில் வந்தார் என்று வேதம் சொல்லுகிறது. நாம் மனந்திரும்ப வேண்டிய நிலையில் இல்லாவிட்டால், அவர் வரவேண்டிய அவசியம் என்ன?

வேதம் போதிக்கின்ற இந்த நான்கு அடிப்படையான உண்மைகளைக் கொண்டு நாம் சிந்தித்துப் பார்த்தால், பாவம் எவ்வளவு கேடானது என்பதையும், அது எத்தகைய கோரமான விளைவுகளை நம்மில் ஏற்படுத்தியிருக்கிறது என்பதையும் நாம் அறியலாம். இதை நாம் அறிந்துணர்வது, இதற்கு நேர் எதிராக கடவுளுடைய இரக்கமாகிய கிருபை எவ்வளவு அற்புதமானது என்பதை நாம் காணும்படிச் செய்கிறது. கடவுள் நம்மை மீட்கவேண்டுமானால், அவர் நம்மீது அதிகமான அன்புகொண்டவராக இருக்க வேண்டும் என்பதையே இது காட்டுகிறது. இந்த உண்மை இயேசு கிறிஸ்துவை நாம் விசுவாசித்து நாடிவரும்படிச் செய்யவேண்டும். இது கடவுளுடைய கட்டளைகள் சரியானது, நல்லது என்று நாம் அறிந்துணரும்படிச் செய்யவேண்டும். அவற்றிற்கு நாம் கீழ்ப்படியாமல் போனதன் காரணமாகவே, கடவுள் தம்முடைய சொந்த குமாரனை நமக்கான மீட்பராக அனுப்பினார். பாவம், எந்தவிதத்திலும் ஒப்பிட முடியாத கடவுளுடைய பரிபூரணமான

பரிசுத்தத்திற்கு நேர்எதிரான, நம்மிலுள்ள அருவருப்பான கொடியநோயாக இருக்கிறது.

கடவுளுடைய நியாயப்பிரமாணம் நம்மைக் குற்றப்படுத்தி, நாம் மரணத்திற்கு உரியவர்கள் என்று கண்டனத்திற்குள்ளாக்குகிற போது, அதை ஏற்படுத்திய கடவுள் நல்லவர் இல்லை என்று நாம் வாதாடமுடியாது. கடவுளிலும் அவருடைய நியாயப்பிரமாணத்திலும் எந்தவிதமான குறைபாடும் இல்லை. கடவுள் பரிபூரணமானவரும் நல்லவருமாவார். அதேபோல் அவருடைய நியாயப்பிரமாணமும் பரிபூரணமானதும் நல்லதுமாகும். நம்முடைய நிலையின் காரணமாகவே கடவுளுடைய நன்மையான கட்டளைகள் நம்மைக் கண்டனத்திற்குள்ளாக்குகின்றன. அவற்றைப் பின்பற்றாமல் போனதன் காரணமாக, நாமே இந்தக் கண்டனத்தை நம்மீது வருவித்துக் கொண்டோம். குற்றவாளியான ஒருவன், நீதிபதிக்கு முன்பாக நிற்கிறபோது, தன்னைத் தண்டனைக்குள்ளாக்குவது கொடுமையானது என்று சொல்லலாம். ஆனால் நீதிபதியோ, "இல்லை, நீ சட்டத்தை மீறியதால், நீயே உன்னைத் தண்டனைக்குள்ளாக்கிக்கொண்டாய்" என்று சொல்லுவார். நாம் கீழ்ப்படியாமல் போகாதிருந்தால், நாம் தண்டனைக்குள்ளாகியிருக்க மாட்டோம். "எங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி, நியாயப்பிரமாணம் நீதிமானுக்கு விதிக்கப்படாமல், அக்கிரமக்காரருக்கும், அடங்காதவர்களுக்கும், பக்தியில்லாதவர்களுக்கும், பாவிகளுக்கும், அசுத்தருக்கும், சீர்கெட்டவர்களுக்கும்" (1 தீமோத்தேயு 1:9) விதிக்கப்பட்டது. மனிதன் செய்த தவறே, அதாவது அவனுடைய பாவமே, அவனைக் கண்டனத்திற்குள்ளாக்கியிருக்கிறது.

முடிவாக, இது குறித்த சில விளக்கங்கள்:

1. கடவுளுடைய நியாயப்பிரமாணம் அனைத்தும் நன்மையானவை. அவை பரிபூரணமானவை, நீதியானவை. நாம் எப்படி வாழவேண்டும் என்பதை அவை நமக்குப் போதிக்கின்றன.

2. கடவுளுடைய கட்டளைகளை நாம் மீறுகிறபோது, அவை நீதியானவிதத்தில் நம்மைக் கட்டளையை மீறினவர்களாகவும், பாவிகளாகவும் கண்டனத்திற் குள்ளாக்குகின்றன.

3. நியாயப்பிரமாணம், பாவம் செய்தவனையும், பாவத்தையும் கண்டிக்கிறது. கண்டனத்திற்குள்ளான குற்றவாளி அதன்மீது பழிசுமத்தக்கூடாது.

4. கடவுளுடைய கிருபை இடைமறித்து நம்மைக் காப்பாற்றாவிட்டால், கடவுளுடைய நியாயப் பிரமாணத்தை மீறியதன் காரணமாக நாம் செத்தழிந் திருப்போம்.

5. கடவுள் தம்முடைய நன்மையான கட்டளைகளைக் கொண்டு பாவியைக் கண்டனத்திற்குள்ளாக்குகிறார். ஆனால், நாம் செய்த பாவமே நம்மை மரணத்திற் குள்ளாக்குகிறது.

6. பாவம் மிகவும் வஞ்சனையானது. எப்படியென்றால், நன்மையான நியாயப்பிரமாணத்தைப் பயன்படுத்தி நமக்குக் கேடான முடிவைக் கொண்டுவருகிறது. அதாவது, உணவையே விஷமாக மாற்றுவதுபோல்.

7. பாவம் கொடூரமானது, மரணத்திற்குரியது, நமக்குத் தீமையையே வருவிக்கக்கூடியது என்பதைக் கடவுளுடைய நியாயப்பிரமாணம் நமக்குக் காட்டுகிறது.

இனித் தொடர்ந்து, பாவம் என்றால் என்ன என்பதைக் குறித்து பார்ப்போம்.

# 1

# பாவம் என்றால் என்ன?

பாவம் செய்வதென்பது, நம்முடைய எண்ணத்திலும், வார்த்தையிலும், செயலிலும் கடவுளுடைய நியாயப்பிரமாணத்தை மீறுவதாகும். “பாவஞ்செய்கிற எவனும் நியாயப்பிரமாணத்தை மீறுகிறான்; நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம்.” *(1 யோவான் 3:4).*

கடவுள், நாம் தீமை செய்வதைத் தவிர்த்துவிட்டு, நன்மையையே செய்யவேண்டும் என்று கோருகிறார். அதற்கு நாம் கீழ்ப்படியாமல் போனால், அது பாவமாகும். நாம் அநேக தவறான செயல்களைச் செய்தாலும், அல்லது சிறிதளவு செய்தாலும், கடவுள் நம்மிடம் கோரியுள்ளவற்றைச் செய்யாமற்போகும் எந்தவொரு செயலும் பாவமாகும். “எப்படியெனில், ஒருவன் நியாயப்பிரமாணம் முழுவதையும் கைக்கொண்டிருந்தும், ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான்.” *(யாக்கோபு 2:10)*

“ஆவியின் கனி” என்று வேதம் சொல்லுகிற “அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்” ஆகிய இவைகளுக்கு எதிராக எந்தவொரு கட்டளையும் இல்லை. ஆனால் மாம்சத்தின் செயலுக்கு எதிராகக் கட்டளைகள் இருக்கின்றன.

கேடான காரியங்களை நாம் செய்வது மட்டும் பாவமல்ல, நன்மையான காரியங்களைச் செய்யாமலிருப்பதும் பாவமாகும்.

இந்தச் சிந்தனையோடு அடுத்த தலைப்பிற்கு நாம் செல்லுவோம்.